UNIVERSITY OF PERADENIYA
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
දූරස්ථ හා අධ්‍යාපන කේන්ද්‍රය අඛණ්ඩ

# GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016
ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2016

## அரசியல் சமூகக் கோட்பாடுகள் (PSG I)
## Political Science (PSG I)

எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்
இவ்வினாத்தாளில் மொத்தம் 10 வினாக்கள் உள்ளன
எவையேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடை எழுதவும்
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள் மட்டும்

---

01. அரசியல் மற்றும் சமூக கோட்பாடுகளின் இயல்பையும் பாடப்பரப்பையும் விளக்கி ஒரு கற்கைநெறியாக அதனைக் கற்பதனுடைய பயன்பாட்டை பரிசீலிக்குக.

02. அரசு பற்றிய அரசியல் கோட்பாட்டின் அபிவிருத்திக்கு அரிஸ்டோடில் ஆற்றிய பங்களிப்பு பற்றி கருத்துரைக்க.

03. தனியார் சொத்துடமை எண்ணக்கரு பற்றி ஜோன் லொக்கினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை விளக்குக.

04. "நிக்கலோ மக்கியாவல்லி மத்தியகால மற்றும் நவீன அரசியல் சிந்தனைகளுக்கிடையிலான எல்லைக்கோடாக நிற்கின்றார்" கருத்துரைக்க.

05. சமூக ஒப்பந்த கோட்பாடு பற்றி தோமஸ் கொப்ஸ் மற்றும் ரூசோவினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

06. சனநாயக எண்ணக்கரு தொடர்பாக பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்று பற்றி ஒரு விமர்சனக் கட்டுரை எழுதுக
   I. சனநாயகத்தினுடைய விசேட பண்புகள்
   II. ஒரு வெற்றிகரமான ஜனநாயக அரசியல் முறைமைக்கு அவசியமான காரணிகள்

07. தற்கால சமூகத்தினுடைய வர்க்க கட்டமைப்பை விளக்குவதற்கு அதனுடைய பொருத்தப்பாட்டில் விசேட கவனம் செலுத்தி வர்க்க முரண்பாடு பற்றிய மார்க்சிச கருத்துக்களை விமர்சனரீதியாகப் பரிசீலிக்குக.

ம.ப.ப

08. பின்வரும் எண்ணக்கருக்களில் <u>ஏதாவது ஒன்றினுடைய</u> பலத்தையும் பலவீனத்தையும் விமர்சனரீதியாக பரிசீலிக்குக.

I. சமத்துவ எண்ணக்கரு

II. சுதந்திர எண்ணக்கரு

9. " பாசிசம் இரண்டாம் உலகப்போரின் முடிவுக்குப் பின்னரும் கூட சில அரசியல் முறைகளை விளக்குவதற்கு பொருத்தமாக இருந்து கொண்டிருக்கின்றது" இதை நீர் ஏற்கின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

10. பின்வருவனவற்றுள் <u>ஏதாவது இரண்டு</u> பற்றி சிறுகுறிப்புக்கள் எழுதுக

I. கற்பனா சோசலிசவாதம்

II. அரசு பற்றிய பௌத்தமதக் கோட்பாடு

III. ரோமானிய சட்டம் பற்றிய சிசரோவின் கருத்துக்கள்

IV. இறைமை எண்ணக்கரு பற்றிய ஜீன்போடினுடைய கருத்துக்கள்

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016
பொதுக் கலைத் தேர்வு பரீட்சை (வெளிவாரி) – ஓகஸ்ட் 2016

அரசறிவியல் விஞ்ஞானம் Political Science (PSG: II)
இலங்கை அரசாங்கம் (Government of Sri Lanka)

அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்
இவ்வினாத்தாளில் மொத்தம் பத்து வினாக்கள் உள்ளன
எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை எழுதவும்
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

(01) "இலங்கையரது தேசிய இயக்கமானது ஒரு வெகுஜன அடிப்படையிலான இயக்கமாக இருக்கவில்லை". நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(02) இலங்கையர்களின் அரசியல் அமைப்புக்களினால் (Political Organizations) டொனமூர் ஆணையாளர்களின் முன்னிலையில் முன்வைக்கப்பட்ட பிரதான பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து கருத்துரைக்க.

(03) "1931இல் வயது வந்தோருக்கான சர்வசன வாக்குரிமையின் அறிமுகமானது இலங்கையில் புதிய அரசியல் சகாப்தத்தை ஆரம்பித்துவைத்தது". விவாதிக்க.

(04) சோல்பரி யாப்பின் நீக்கத்துக்கு ஆதரவாக முன்வைத்த வாதங்களை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக.

(05) இலங்கையின் சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலில் "சமய காரணிகள்" வகித்த வகிபங்கினை நீர் எவ்வாறு மதிப்பிடுவீர்?

(06) இலங்கையினுடைய அரசியல் கட்சிமுறைமையினை இரு கூட்டணி முறைமை (two coalition system) என விபரிப்பது சரியானதா?

ம.ப.பா.

(07) இலங்கையிலுள்ள தேர்தல் முறையில் இருக்கும் குறைபாடுகள் குறித்து விமர்சனக் கட்டுரையொன்று வரைக.

(08) இலங்கை போன்ற நாட்டிற்கு ஜனாதிபதித்துவ அரசாங்க முறையினைவிட மந்திரிசபை அரசாங்க முறை மிகவும் பொருத்தமானது என்ற கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா?

(09) தற்போதய பாராளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் பணிகளை 1972 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் காணப்பட்ட தேசிய அரசுப் பேரவையின் அதிகாரம் மற்றும் பணிகளுடன் ஒப்பிடுக.

(10) ‘1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 19வது சீர்திருத்தமானது இலங்கையில் ஜனநாயக அரசியல் முறைமையின் வளர்ச்சிக்கான அடித்தளத்தினை தயார்படுத்தியுள்ளது’. இக்கூற்றினை விமர்சன ரீதியாக பரிட்சிக்க.

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்

# GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2016
பொதுக் கலைத் தேர்வு பரீட்சை (வெளிவாரி) ஓகஸ்ட 2016

## அரசறிவியல் விஞ்ஞானம் Political Science (PSG:III)
பொதுத்துறை நிருவாகம Public Administration

அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்
இவ்வினாத்தாளில் மொத்தம் பத்து வினாக்கள் உள்ளன
எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை எழுதவும்
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

01. 'பொதுத்துறை நிர்வாகம்' என்பதனால் நீர் பொருள்கொள்வது யாது? ஒரு கற்றைநெறி என்றவகையில் அதன் தோற்றம் மற்றும் வளர்ச்சி தொடர்பில் சுருக்கமாக விளக்குக.

02. "இலங்கையில் பொதுத்துறை நிருவாகத்திற்கும் அரசியலிற்கும் இடையிலான தொடர்பு தவிர்க்க முடியாததாகும்" இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களை விளக்குக.

03. முறைசாரா ஒழுங்கமைப்பு என்பதன் பொருள் யாது? முறையான மற்றும் முறைசாரா ஒழுங்கமைப்புக்களுக்கிடையிலான தொடர்பினை விபரிக்குக.

04. பின்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டினை** சுருக்கமாக பரிட்சிக்க.

அ) பிரெடெறிக் வின்ஸ்லோ ரெயிலருடைய (Frederick Winslow Taylor) விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாடு

ஆ) இலங்கையில் புதிய பொது முகாமைத்துவ சீர்திருத்தங்கள்

இ) ஒழுங்கமைப்புக் கோட்பாட்டிற்கு எல்டன் மாயோவின் பங்களிப்பு

ஈ) பிரான்ஸ் சிவில் சேவையின் தனித்துவம்

05. "தற்கால நிர்வாக முறைமைகளில் மக்ஸ் வெபரின் இலட்சிய பணியகவமைப்பு தொடர்பான சிந்தனை நடைமுறைச்சாத்தியமற்றது." இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க.

ம.ப.பா..

06. பிரித்தானியாவினுடைய சிவில் சேவையின் அபிவிருத்திக்கு புல்ரன் குழு அறிக்கையின் (1968) பங்களிப்பினை விமர்சன ரீதியாக விளக்குக.

07. "இலங்கையில் அதிகார பரவலாக்கல் (Devolution) ஏற்பாட்டில் காணப்படும் குறைபாடுகளின் காரணமாகவே மாகாண பொதுத்துறை நிருவாகமானது பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது". கருத்துரைக்க.

08. "பொது-தனியார் கூட்டுக்களின் (public-private partnerships) வளச்சியின் காரணமாக நவீன அரசுகளில் பொதுத்துறை நிருவாகத்தின் வகிபங்கு மற்றும் பணிகளானவை குறைந்துவருகின்றன" பரிசீலிக்குக.

09. "நல்லாட்சியினைப் பேணுவதில் பொதுத்துறை நிருவாகத்தின் வகிபங்கு முக்கியமானதாகும்". இக்கூற்றினை இலங்கையின் அனுபவத்திற்கு விசேட கவனம் செலுத்தி விமர்சன ரீதியான ஆராய்க.

10. பின்வருவனவற்றுள் **ஏதேனும் மூன்றிற்கு** சிறுகுறிப்புகள் எழுதுக.

அ) இலத்திரனியல் ஆட்சி (e-governance)

ஆ) லூதர் குலிக் (Luther Gulick)

ஆ) புதிய பொதுத்துறை நிருவாகம் (New Public Administration)

இ) அமெரிக்க சிவில் சேவையின் அடிப்படைப் பண்புகள்

இ) இலங்கையின் 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் பொதுச் சேவை ஆணைக்குழு